1978 மார்ச் 21]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

வேளாண்மைப் பணிகளுக்கு மின் இணைப்பு.

(துணை வினா இல்லை.)

*641 வினா—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், சிங்களம் கோம்பை, வரத ராஜபுரம் முதலிய கிராமங்களில் விவசாயத்திற்கு மின் இணைப்புக் கொடுக்க மறுப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மின் இணைப்புக் கிடைக்க அரசு நடவடிக் கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ). நிலுவையிலுள்ள மனுக்களுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஒரு முன்னுரிமை பட்டியல் தயாரித்திருக்கிறது. இந்த வழி முறைக்கு ஏற்ப சிங்களம்கோம்பை, வரதராஜபுரம் முதலிய கிராமங் களில் மின் இணைப்பு வழங்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, சேலம் மாவட் டத்தைச் சேர்ந்த சிங்களம்கோம்பை, வரதராஜபுரம் ஆகிய இடங்களில் எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்படும், எவ்வளவு சீக்கிரம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கிராமப்புற மின் வசதி திட்டத்தின் கீழ் வரதராஜபுரத்தில் இருந்து 15 மனுக்களும் சிங்களம்கோம்பையில் இருந்து 28 மனுக் களும் வரப் பெற்றுள்ளன. வரதராஜபுரத்திலிருந்து வரப்பேற்ற 15 மனுக்கள் எடுத்துக் கொள்ளப்படும். சிங்களம்கோம்பை யிலிருந்து வரப்பெற்ற 28 மனுக்களில் 18 சிக்கனம் அற்றவைக ளாக இருக்கின்றன. மீதமுள்ள 10 ஆய்வில் உள்ளன.

சந்தனத் தைலம் மற்றும் சோப்பு தயாரிப்பு.

*642 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா ?

தமிழ்நாட்டில் வளரும் சந்தன மரத்தைக் கொண்டு இங்கேயே ஒரு சந்தனத் தைலம் மற்றும் சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்குப் திட்டம் உள்ளதா ?